بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ○

# ஜுமுஆ பேருரை

## அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்

## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)

இடம் : ஹதீகத்துல் மஹ்தி ஜல்ஸா திடல் – இங்கிலாந்து

August 30
2013

தமிழாக்கம் : மவ்லவி N. ஷியாவுல் ஹக் சாஹிப்

# U.K. ஜல்ஸா ஸாலானா 2013

**தசஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

கடந்த குத்பாவில் விருந்து உபசரிப்பாளருக்கு விருந்தோம்பல் தொடர்பான சில பொறுப்புகளைப் பற்றி கூறினேன். நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய விருந்தினர்களுக்கு ஓர் எழுச்சியுடனும், ஆர்வமுடனும் சேவை செய்வது நமது கடமையாகும்.

நான் இன்று சுருக்கமாக விருந்தினர்களுக்கும், மாநாட்டில் கலந்து கொள்ளக் கூடியவர்களுக்கும் சிலவற்றைக் கவனமூட்ட விரும்புகின்றேன். இதன் மூலம் அவர்களுக்கு மாநாட்டு சூழலின் புனிதத் தன்மை பற்றிய கவனம் ஏற்பட வேண்டும். அவர்களுக்கும் இங்கு கலந்து கொள்வதன் மூலம் என்னென்ன பொறுப்புகள் உள்ளன என்பதும் தெரிய வேண்டும்.

இதைப் போன்று அமைப்பாளர்களுக்கு ஒத்துழைப்பு தருவதன் பக்கமும் இவர்களது கவனம் இருக்க வேண்டும். இவர்கள் மீது இரண்டு பொறுப்புகள் உள்ளன. முதலாவது, எந்த நோக்கத்திற்காக இங்கு வந்துள்ளார்களோ அதனை நிறைவேற்றுவது ஆன்மீகம், அறிவு மற்றும் தர்பிய்யத்தில் தன்னை மேம்படுத்துவது, இரண்டாவது பொறுப்பு அமைப்பாளர்களுடன் ஒத்துழைப்பது ஆகும்.

நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் தொடர்பு கொண்டுள்ளோம். நாம் எப்போதும் இந்த விசயத்தின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். அதாவது நாம் தனது உரிமைகளைப் பெறுவதன் பக்கம் மட்டும் கவனம் செலுத்தக் கூடாது. மாறாக மற்றவர்களது உரிமைகளைச் செலுத்தவும் வேண்டும். மேலும் தம்மீதுள்ள பொறுப்புகளை நிறைவேற்றவும் வேண்டும். விருந்தினர்களுக்குரிய பொறுப்புகளையும் நிறைவேற்ற வேண்டும். மிகப்பெரிய பொறுப்பு அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவதாகும். அவன் நமக்காக, மாநாட்டில் கலந்து கொள்ளக் கூடியவர்களுக்காக வசதிகளை ஏற்படுத்தியுள்ளான். இந்த இடத்தில் இப்படிப்பட்ட சூழலில் சாதாரண நாட்களில் இங்கு எவ்விதமான வசதியும் இருப்பதில்லை. இப்போது அதற்கான ஏற்பாட்டைச் செய்துள்ளான். அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தி, பிறகு உங்களுக்கு வசதிகளை ஏற்படுத்துவதற்காக இரவு பகலாக வேலை செய்த, முயற்சிகள் செய்த அந்த பணியாளர்களுக்கு நன்றி செலுத்த வேண்டும். அவர்களுக்காக துஆக்கள் செய்ய வேண்டும். அவர்கள் தமது அயராத உழைப்பினாலும் முயற்சியினாலும் உங்களுக்கு வசதிக்கான ஏற்பாட்டைச் செய்துள்ளார்கள்.

கடந்த குத்பாவில், ஒரு ஹதீஸின் அடிப்படையில் பணியாளர்களிடம் கூறினேன். அதில் பெருமானார் (ஸல்) அவர்கள் ஒருவர் மற்றவருடன் முகமலர்ச்சியோடு பழக வேண்டும் எனக் கூறியிருந்தார்கள். இதற்கு பலவகையான வழிகாட்டுதல்களை அன்னார் (ஸல்) அவர்கள் கூறியிருந்தார்கள். இதனை பெரிய நன்மையாகவும் கூறினார்கள். அதாவது ஒருவர் மற்றவருடன் முகமலர்ச்சியுடன் பழகுவது ஒரு மிகப்பெரிய நன்மையாகும். எனவே, இந்த வழிகாட்டல் ஒவ்வொரு அஹ்மதிக்கும் உரியதாகும். வந்திருக்கக்கூடிய ஒவ்வொரு விருந்தினரும், மாநாட்டில் கலந்து கொள்ளக் கூடிய ஒவ்வொருவரும் இவற்றை மனதில் பதிய வைத்துக் கொள்ள வேண்டியது அவர்களது கடமையாகும். மேலும் இதன்படி செயல்பட முயற்சி செய்ய வேண்டும். இதில் உங்கள் மீது கடமை இருக்கிறது. அதாவது பணியாளர்களிடம் ஏதாவது தவறு ஏற்பட்டு விட்டால் அதனை கண்டும் காணாதவாறு விட்டு விட வேண்டும். தற்காலிக அமைப்பினால் உள்ள நிர்பந்தத்தை உணருங்கள். சூழலை மகிழ்ச்சிகரமாக ஆக்குவதற்கு முயற்சி செய்யுங்கள். ஏனென்றால் நீங்கள் இங்கு நன்மையினைப் பெறுவதற்கே வந்துள்ளீர்கள். அவ்வாறே இருக்கவும் வேண்டும். அல்லாஹ்வுடைய திருப்தியினைப் பெறுவதற்காக வந்துள்ளீர்கள்.

இதனைப் போன்று விருந்தினர்களும் இங்கு வந்திருக்கக் கூடியவர்களும் பரஸ்பரம் ஒருவருக்கொருவர் கண்ணியம் செலுத்துங்கள். சில சமயங்களில் தமக்கிடையே உள்ள பழைய பகைமையினால் இங்கு ஒருவரையொருவர் நேருக்கு நேர் சந்திக்கும் போது கொந்தளித்து விடுகின்றனர். சில சமயங்களில் இப்படிப்பட்ட சூழ்நிலையும் ஏற்படுகின்றது. அதாவது இரண்டு பிரிவினரிடையே இரண்டு நபர்களுக்கிடையே கடின வார்த்தைகள் வெளிவர ஆரம்பித்து விடுகின்றன. அவ்வாறு ஓர் அஹ்மதி சூழலில் ஏற்படவே கூடாது. சில சமயங்களில் கைகலப்பு ஏற்பட்டு விடுகின்றது. ஆக, இப்படிப்பட்ட சூழலில் வந்து இதுபோன்ற செயல்களைச் செய்வது அப்படிப்பட்ட மக்களின் துரதிஷ்டமேயாகும்.

இப்படிப்பட்ட மக்கள் தூய்மையான இந்த சூழலை அசுத்தம் செய்யக் காரணமாக அமைகின்றவர்கள் ஆவர். ஆக எவருடைய உள்ளம் மற்றவர்கள் மீதுள்ள பகைமை மற்றும் காழ்ப்புணர்ச்சியினால் நிரம்பி உள்ளதோ அவர் மாநாடுகளுக்கு வராமல் இருப்பதே சிறந்ததாகும். வந்திருக்கக்கூடிய யாருடைய உள்ளத்திலாவது பகைமை இருக்கும் என்றால் அவர் அதனை களைந்து விடுவார் என இன்று உறுதி கொள்ள வேண்டும். நன்மையைப் பரப்பக்கூடிய இந்த சூழலில் தனது உள்ளத்தை பகைமை மற்றும் காழ்ப்புணர்ச்சியினால் நிரப்பி வைப்பது இங்கு வரக்கூடிய நோக்கத்தை அழித்து விடும். நன்மைகளை செய்வதே இங்கு வருவதன் நோக்கமாகும். இங்கு வரக்கூடியவர்கள், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எதனை விரும்பினார்களோ அதனை பெறுவதையே குறிக்கோளாகக் கொண்டிருப்பவர்களாக இருக்க வேண்டும். எப்போதும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய துஆக்களுக்கு வாரிசாக ஆவதையே கண்முன் நிறுத்த வேண்டும். சிறந்த உயர்ந்த நல்லொழுக்கத்தை வெளிப்படுத்துவதையே அனைவரும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

பிறகு மாநாட்டு நிகழ்ச்சிகளை மிகுந்த கவனத்துடன் கேட்பதும் ஒரு பொறுப்பாகும். இதைப் பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய வார்த்தைகளிலேயே கவனமூட்டுகின்றேன்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

அனைவரும் இந்த மாநாட்டு நிகழ்ச்சிகளை மிகுந்த கவனத்துடன் கேட்க வேண்டும். மிகுந்த கவனத்துடனும், சிந்தனையுடனும் இதனை கேளுங்கள். ஏனென்றால் இது ஈமான் சம்பந்தப்பட்ட விசயமாகும். இதில் சோம்பேறித்தனம், கவனமின்மை, ஆர்வமின்மை போன்றவை மிகவும் மோசமான விளைவை ஏற்படுத்தும்.

ஈமானில் சோம்பேறியாகச் செயல்படக்கூடியவர்களை நோக்கி ஏதாவது கூறப்பட்டால், அவர்கள் அதனை கவனத்துடன் கேட்பதும் இல்லை. பேசக்கூடியவருடைய கருத்துகளிலிருந்து அது எவ்வளவு உயர்ந்த நன்மை தரக்கூடியதாக பலன்தரக்கூடியதாக இருந்தாலும் சரி, அவர்களுக்கு அதிலிருந்து எந்தப் பலனும் கிடைப்பதில்லை. இப்படிப்பட்ட மக்களைப் பார்த்து தான் இவ்வாறு கூறப்படுகின்றது. அதாவது அவர்கள் காதுகளைக் கொண்டவர்களை இருப்பார்கள். ஆனால் கேட்பதில்லை. உள்ளம் கொண்டவர்களாக இருப்பார்கள். ஆனால் புரிவதில்லை. நினைவில் கொள்ளுங்கள். கூறக்கூடியவற்றை மிகுந்த கவனத்துடன் கேளுங்கள். ஏனென்றால் கவனத்துடன் கேட்காதவர் நீண்ட காலம் வரை பலன்தரக்கூடிய நபருடைய நெருக்கத்தில் இருந்தாலும் அவருக்கு எந்த விதமான நன்மையும் கிடைக்காது.

எனவே மாநாட்டிற்கு வரக்கூடியவர்கள் இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டிய அவசியம் இருக்கிறது. அதாவது நாம் இன்றைய நாட்களில் மாநாட்டின் நோக்கங்களை அடைய வேண்டும். மாநாட்டு நிகழ்ச்சிகளைக் கவனத்துடன் கேட்க வேண்டும். தனது சுயநலன்களை விட்டு விட்டு இருக்க வேண்டும். மேலும் தனது ஈமானுடைய முன்னேற்றத்திற்காக மாநாட்டு நிகழ்ச்சிகளைக் கேட்க வேண்டும். இவற்றை தனது வாழ்வின் அங்கமாக்குவதற்கு முயற்சி செய்ய வேண்டும். மேலும் தனது உள்ளத்தை எல்லா விதமான அசுத்தத்திலிருந்தும் தூய்மையாக்க வேண்டும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தெளிவாகக் கூறியுள்ளார்கள்:**

முஸ்லிம்களின் வீழ்ச்சி, தோல்வி, பலவீனம் போன்றவை இதனால் தான் உருவானது. அதாவது எங்கு மார்க்கக் கூட்டங்கள் நடைபெறுமோ அங்கு இவர்கள் செல்லத்தான் செய்கிறார்கள். ஆனால் கலப்பற்ற தூய உள்ளத்துடன் செல்வதில்லை.

அதாவது, சொற்பொழிவு ஆற்றக் கூடியவர்களிடமும் கலப்பற்ற தூய உள்ளம் இருப்பதில்லை. கேட்கக் கூடியவர்களிடமும் கலப்பற்ற தூய உள்ளம் இருப்பதில்லை. ஆனால் நமது மாநாடுகள் இது போன்றவற்றிலிருந்து தூய்மையானதாகும். அவ்வாறு இருக்க வேண்டும்.

மாசா அல்லாஹ் சொற்பொழிவாளர்கள் மிகவும் கலப்பற்ற தூய உள்ளத்துடன் தயார் செய்து வருகின்றார்கள். மிகவும் நல்ல உரைகள் நிகழ்த்தப்படுகின்றன. இறை அருளால் கேட்கக் கூடியவர்களில் பெரும்பான்மையினர் கலப்பற்ற

தூய்மையானவர்களாக இருக்கின்றனர். மேலும் அது மாநாட்டின் அருள்களைப் பெறுவதற்காகவே வருகின்றனர். ஆனால் சிலர் இவ்வாறும் உள்ளனர். அவர்களது நோக்கம் ஒன்றுகூடுவதும், பேசுவதும், கூட்டம் போடுவதுமே ஆகும். யாராவது இதுபோன்று இருந்தால் அவரிடம் பலவீனம் இருந்தால் அவர் இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். இதன் மூலம் நமது இந்த மாநாடு 100% கலப்பற்ற முறையில் இறைவனுக்காக வரக்கூடியதாக ஆக வேண்டும்.

பிறகு நான் மாநாட்டு நிகழ்ச்சி தொடர்பாக நான் இதனையும் கூறி விடுகின்றேன். சில மக்களுக்கு முழக்கங்கள் எழுப்புவதற்கான, நாரே தக்பீர் கூறுவதற்கான ஆர்வம் இருக்கும். உரை நிகழ்த்தப்படும் போது உரையை மிகவும் கவனத்துடன் கேளுங்கள். சில சொற்பொழிவுகள் எவ்வளவு முக்கியமானதாக இருக்கும் என்றால், அந்த சமயத்தில் நாரே தக்பீர் கூறுவதற்கு அவசியமாக இருக்காது. உள்ளத்தின் எழுச்சியினால் முழக்கங்கள் எழுந்தால் மட்டுமே நாரே தக்பீர் கூற வேண்டும். ஆனால் இங்கு எந்த நேரமும், எல்லா விசயத்திலும் உணர்வு பொங்கக்கூடியவர்களும் உள்ளனர். அவர்கள் நாரே தக்பீர் கூறிக் கொண்டிருப்பார்கள். அவர்கள் கவனத்துடன் இருக்க வேண்டும்.

விருந்தினர்கள் இதனையும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். அதாவது இந்த அனைத்து பணியாளர்களும், சேவை செய்யக் கூடியவர்களும் தனது வேலைகளை மகிழ்ச்சியுடன் விட்டு விட்டு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய விருந்தினர்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்பதற்காக வந்திருக்கின்றனர். எனவே எல்லா சந்தர்ப்பங்களிலும் இவர்களுக்கு ஒத்துழைப்பு அளியுங்கள்.

குறிப்பாக பாதுகாப்பின் போது சோதனை செய்யும் நேரத்தில் இதனது தேவை அதிகமாக இருக்கும். மீண்டும் மீண்டும் சோதனை செய்வதினாலும், நேரம் அதிகமாவதினாலும் உங்களுக்கு கஷ்டம் ஏற்படலாம். ஆனால் இந்த ஏற்பாடும் உங்களது பாதுகாப்பிற்காகவே செய்யப்படுகின்றது. எனவே இதனை சகித்துக் கொள்ளுங்கள. மேலும் பணியாளர்களுக்கு முழுமையாக ஒத்துழைப்பு கொடுங்கள். ஸ்கேனிங் போன்றவற்றிலும் சில சமயங்களில் நேரமாகி விடுகின்றது. அதிலும் பொறுமையுடன் தனது பொருட்களையோ, தன்னையோ சோதனை செய்ய வேண்டியதிருந்தால் சோதனை செய்யுங்கள்.

இதைப் போன்று Traffic –ற்கான ஏற்பாடும் உள்ளது. ஒவ்வொரு வருடமும் இதில் முன்னேற்றம் கொண்டு வர முயற்சி செய்யப்படுகின்றது. இவ்வருடமும் முன்னேற்றம் வந்திருக்கும் என நான் நம்புகின்றேன். இன்சா அல்லாஹ். இருந்தபோதிலும் சில சமயங்களில் குறைபாடு ஏற்பட்டு விடும். சில சமயங்களில் சிலருக்கு தனது Parking பற்றி, தனது Parking Pass பற்றி சரியாக தெரியாத காரணத்தால் சில சமயங்களில் Rush –ன் காரணமாக நேரம் ஆகும். கஷ்டமும் ஏற்படும். சில சமயங்களில் சில மணி நேரங்கள் வரை ஆகி விடுகின்றன. எனவே எந்த அளவு பணியாளர்கள் பொறுமையுடன் உங்களுக்கு வழிகாட்டுகின்றார்களோ அதைப் போன்றே வரக்கூடிய விருந்தினர்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

ஒரு நபர் பொறுமை இழந்து விட்டால், அதன் காரணமாக பெரிய ஒரு வரிசை ஆரம்பித்து விடும். கார் வைத்துள்ள ஒருவர் பிரச்சனையை ஏற்படுத்தினாலும், பிறகு பின்னால் ஒரு பெரிய வரிசை ஏற்பட்டு விடும். எனவே ஒவ்வொருவரும் இதனை உணர வேண்டும். யாருக்கும் கஷ்டத்தினை ஏற்படுத்தக் கூடாது.

நான் பாதுகாப்பைப் பற்றி கூறினேன். இதைப் பற்றி கலந்து கொள்ளக் கூடிய ஒவ்வொருவரும் கவனத்தில் கொள்ள வேண்டும். ஒவ்வொருவரும் தனது சூழலைக் கண்காணித்து வர வேண்டும். இந்த அளவு செக்கிங் இருக்கிறது. இந்த அளவு ஏற்பாடுகள் இருக்கின்றன. முன்பை விட சிறந்த ஏற்பாடுகள் உள்ளன. எனவே எதற்கும் கவலை அடையத் தேவையில்லை. தனது சூழலைக் கண்காணிக்கத் தேவையில்லை எனத் திருப்தி கொள்ளாதீர்கள். ஒரு மூஃமின் எப்போதும் கவனமாகவும் உசாராகவும் இருக்க வேண்டும். எனவே சுற்றுச்சூழலை எந்நேரமும் கண்காணிக்க வேண்டிய அவசியம் இருக்கின்றது. அஹ்மதிய்யா ஜமாஅத்தின் பாதுகாப்பு ஏற்பாடு இவ்வளவு சிறந்ததாக இருப்பதற்கு ஒவ்வொரு நபரும் தனது பொறுப்பை உணர்ந்திருப்பதே காரணமாகும். அவ்வாறு புரியவும் வேண்டும்.

அடுத்த ஒரு முக்கியமான விசயம், தொழுகையைப் பேண வேண்டும். மேலும் தொழுகைக்கான நேரத்திற்கு முன்பாகவே வர வேண்டும். குறைந்தபட்சம் தொழுகைக்கு ஒன்றிரண்டு நிமிடங்களுக்கு முன்பாக வர வேண்டும். தொழுகை தொடங்கப்பட்ட பின் வருவதால் மற்ற தொழுகையாளிகளுக்கு இடையூறு ஏற்படும். நிலையான ஒரு சப்தம் வந்து கொண்டே இருக்கும். மேலும் இதைப் பற்றியும் அறிவிப்பை ஏற்பாட்டாளர்கள் செய்திருப்பார்கள் என நான் கருதுகின்றேன். நானும் இதைப் பற்றி தெளிவுபடுத்தி விடுகின்றேன்.

அதாவது அஹ்மதிய்யத்தின் கொடி ஏற்றப்படும் போது ஒரு பெரும் எண்ணிக்கை தனது இடத்திலிருந்து வெளியே சென்று இந்த நிகழ்ச்சியைப் பார்க்கின்றது. துஆவில் கலந்து கொள்கின்றது. பிறகு இவர்கள் தனது இடத்திற்கு

வந்து அமர்கின்றார்கள். இதனால் மூன்றி ஒரு பகுதி இடம் காலியாகி விடுகின்றது. அவர்கள் வருவதற்கும் உட்காருவதற்கும் நேரம் செலவாகின்றது. இதனால் நிகழ்ச்சிகளை ஆரம்பம் செய்வதற்குள் 10, 15 நிமிடங்கள் வீணாகி விடுகின்றன. எனவே இம்முறை இவ்வாறு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதாவது யாருக்கு ஏற்பாட்டாளர்கள் வெளியே வருவதற்கு அனுமதி வழங்கியிருக்கிறார்களோ அவர்கள் தவிர மற்ற சகோதரர்கள் தனது இடத்திலேயே அமர்ந்திருங்கள். அங்கிருந்தவாறே ஸ்கிரீனில் கொடி ஏற்றும் நிகழ்ச்சியைப் பாருங்கள். மேலும் துஆவில் கலந்து கொள்ளுங்கள். இதன் மூலம் நேரமும் வீணாகாது. நிகழ்ச்சியும் குறித்த நேரத்தில் தொடங்கப்படும்.

மாநாட்டு நாட்களில் சுற்றுப்புறத்தை தூய்மையாக வைப்பது மற்றவர்கள் மீது தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. இதனை பெரும்பாலான மக்கள் வெளிப்படுத்தவும் செய்கின்றனர். எனவே அனைவரும் எப்போதும் இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். ஒவ்வொருவரும் இதன் பக்கம் கவனம் செலுத்தினால் சின்னச்சின்ன அசுத்தங்களை டம்ளர், தட்டு, கவர் போன்றவைகள் கீழே கிடப்பதைக் கண்டால் அதனை எடுத்து குப்பைத்தொட்டியில் போட வேண்டும். இவ்வாறு நீங்கள் சுற்றுப்புறத்தை தூய்மைப்படுத்துவதுடன் நன்மையையும் சேகரிக்கக்கூடியவர்கள் ஆவீர்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், தூய்மை ஈமானில் பாதி ஆகும் என்று கூறியுள்ளார்கள்.

இதைப் போன்று பெரிய பைகள் அல்லது சந்தேகத்திற்குரிய பொருட்களைப் பார்த்தால் அதனை எடுப்பதற்குப் பதிலாக அமைப்பாளர்களிடம், அருகிலுள்ள பணியாளர்களிடம் கூறுங்கள். பிறகு அதனை அங்கிருந்து எடுப்பது அவர்களது பணியாகும்.

கடந்த குத்பாவில் நான் கூறியிருந்தேன். தற்போது அல்லாஹ்வின் அருளால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களது லங்கர் மாநாட்டு ஏற்பாட்டிற்காக இங்கு ஹதீகத்துல் மஹ்தியில் நிரந்தரமாக நிறுவப்பட்டு விட்டது. ரொட்டி தயாரிக்கும் இயந்திரமும் அமைக்கப்பட்டு விட்டது. அல்லாஹ்வின் அருளால் தற்போது வரை ரொட்டி நன்றாக சமைக்கப்பட்டு வருகின்றது. சில சமயங்களில் தற்காலிக தரத்தில் முன்னும் பின்னுமாக இருக்கலாம். எனவே இப்படிப்பட்ட நிலை இருந்தால், முதல் விசயம் அதை சகித்துக் கொள்ள வேண்டும். அதை சாப்பிட முடியவில்லை என்றால் அதனை மாற்றி விட்டு சாப்பிடலாம். அமைப்பாளர்கள் இதனை ஆட்சேபிக்கக் கூடாது. இங்கு சமைக்கப்படக்கூடிய ரொட்டி ஐந்தாறு மணி நேர இடைவெளிக்குப் பிறகு விருந்தினரிடம் வருகின்றது. இவ்வளவு பெரிய ஏற்பாட்டில் புத்தம் புதிதாக ரொட்டி வழங்குவதென்பது கடினமாகும்.

தற்போது வரையுள்ள அறிக்கையின்படி விருந்தினர்களும் சாப்பிடக்கூடிய ஒவ்வொருவரும் இந்த ரொட்டியினை பிடித்திருக்கிறது என கூறியிருக்கிறார்கள். இறைவன் இந்த இயந்திரத்தை சரியான முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கச் செய்வானாக! விருந்தினர்களுக்கு எந்த விதமான கஷ்டமும் ஏற்படாமல் இருக்கட்டுமாக! அமைப்பாளர்களுக்கு எந்த விதமான துன்பமும் ஏற்படாமல் இருக்கட்டுமாக!

இதனையும் நான் கூறி விடுகின்றேன். கடந்த ஜுமுஆ குத்பாவில் நான் ஜெர்மனி உடைய ரொட்டி பற்றி கூறியிருந்தேன். அவர்கள் உடனே பதிலும் கொடுத்து விடுவார்கள் எனவும் கூறினேன். மாலைக்குள் அவர்கள் தனது அறிக்கையை தயார் செய்திருந்தனர். அதில் எங்களது ரொட்டி புதிதாகத்தான் இருக்கும். ஐந்தாறு மணி நேர இடைவெளியில் இது வழங்கப்படுகிறது எனக் கூறியுள்ளனர். இத்துடன் ஒரு பெண்மணி உடைய ஃபேக்ஸும் வந்திருந்தது. அதில் நீங்கள் சரியாகத்தான் கூறினீர்கள். ரொட்டி பழையதாகவும், சாப்பிடுவதற்கு உகந்ததாகவும் இருக்கவில்லை எனக கூறியுள்ளார்.

எவ்வாறாயினும் இருபுறமும் கொஞ்சம் மிகைப்படுத்தப்பட்டு கூறப்பட்டுள்ளது எனத் தெரிகிறது. ரொட்டி மிகவும் பழையதாக இருக்காது. அல்லாஹ்வின் அருளால் சாப்பிடுவதற்கு உகந்ததாகவே இருக்கும். எனவே விருந்தினர்கள் சகித்துக் கொள்ள வேண்டும். இதனை நான் ஏன் கூறினேன் என்றால், ஒவ்வொரு அஹ்மதிக்கும் இது நன்றாகத் தெரியும். மேலும் ஏற்பாட்டளர்களுக்கும் இதுவும் தெரிந்திருக்க வேண்டும். அதாவது ஒவ்வொரு சின்னச் சின்ன விசயத்தையும் ஒவ்வொரு சின்னச்சின்ன குறைபாட்டையும், முன்னேற்றத்தையும் அஹ்மதிகள் உடனே எனக்கு தெரியப்படுத்தி விடுகின்றனர்.

அடுத்து பொதுவாக விருந்தினர்களிடம் ஒவ்வொரு வருடமும் கூறப்படக்கூடிய முக்கியமான விசயம், மேலும் சில சூழ்நிலையின் காரணமாக இதுபோன்ற நிலைகள் கண்முன் வரவும் ஆரம்பித்து விட்டன. எனவே குறிப்பாக இதனைக் கூற விரும்புகின்றேன். அதாவது இங்கிலாந்து அரசாங்கம் மாநாட்டிற்காக தரக்கூடிய விசாக்கள் பொதுவாக 6 மாதங்களுக்குரிய விசாவாக இருக்கும். இதில் Double Entry அல்லது Multiple Entry இடப்படும். மாநாட்டிற்காக தரப்படுகின்ற விசாக்கள் அகதிகளாக இருக்க விண்ணப்பிக்க மாட்டோம் என்ற நிபந்தனையின் கீழ் தரப்படுகின்றது.

அல்லது தமது பிரதிநிதிகளுக்காக ஜமாஅத் சார்பாக எடுக்கக்கூடிய விசாக்களில் இந்த மக்கள் இரண்டாவது முறையாக இந்த விசாவை பயன்படுத்தமாட்டார்கள். அகதிகளாக இருப்பதற்குப் பயன்படுத்தமாட்டார்கள் என தெரியப்படுத்தப்படுகின்றது. இவ்வாறு பரஸ்பரம் ஒரு Understanding ஏற்படுத்தப்படுகின்றது.

இம்முறை சில ஜமாஅத் பிரதிநிதிகளுக்கு விசா கொடுப்பதற்கு அரசாங்கம் மறுத்தது. அவர்களிடம் நாம் இதற்காக தொடர்பு கொண்ட போது, அவர்கள் விசா கொடுப்பதற்கு சம்மதித்தார்கள். ஆனால் அவர்கள் புகார் செய்தார்கள். அதாவது ஒன்றிரண்டு நபர்கள் இவ்வாறு உள்ளனர். மாறாக பலர் உள்ளனர். அதாவது அவர்கள் மாநாட்டிற்காக விசாக்களைப் பெற்று மீண்டும் அதனை அகதிகளாக இருப்பதற்கு பயன்படுத்துகின்றனர் என்றனர். ஏனென்றால் அதில் Double Entry இடப்பட்டிருக்கும். முதன்முறை வந்து சென்று விடுகின்றனர். பிறகு மீண்டும் வருகின்றனர்.

எவ்வாறிருப்பினும், இந்த அரசாங்க அலுவலர்களை நாம் சமாதானப்படுத்தி விட்டோம். அல்லாஹ்வின் அருளால் விசாக்களும் கிடைத்து விட்டன. ஆனால் நாம் கஷ்டப்பட வேண்டியதும் இருந்தது. இது, நாம் செல்வோம். பிறகு இதனை Asylum பெறுவதற்காக பயன்படுத்திக் கொள்வோம் என்ற எண்ணத்துடன் வரக்கூடிய மக்களால் வந்த கஷ்டம் ஆகும். இப்படிப்பட்ட மக்கள் மீது ஜமாஅத்திலிருந்து நடவடிக்கையும் எடுக்கப்படுகின்றது. ஆனால் இதனால் ஜமாஅத்தின் கண்ணியம் நிச்சயமாக பாதிக்கப்படுகிறது. இதனை ஒவ்வொரு அஹ்மதியும் கவனத்தில் கொள்ள வேண்டும். பிறகு கலப்பற்ற முறையில் தூய உள்ளத்துடன் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக வரக்கூடிய மக்களுக்கு இப்படிப்பட்ட நபர்களுடைய செயல்கள் தடையாக ஆகி விடுகின்றது.

பாகிஸ்தானிய அஹ்மதிகள் மிகவும் கஷ்டப்பட்டு தமது வாழ்வை அங்கு கழித்து வருகின்றனர் என்பதில் சந்தேகமில்லை. பணியிடங்களில் பணி திருப்தியாக இருந்தாலும் கூட முதலாளிகள் ஏனைய பணியாளர்கள் மற்றும் முல்லாக்களின் அச்சத்தினால் அவர்களை பணியிலிருந்து நீக்கி விடுகின்றனர். அல்லது தொடர்ந்து அவர்களுக்கு துன்பம் இழைக்கப்படுகின்றது. Mental Torture அவர்களுக்கு கொடுக்கப்படுகின்றது. உடன் பணியாற்றும் பணியாளர்கள் துன்பமிழைக்கின்றனர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு எதிராக தரக்குறைவான வார்த்தைகளைப் பயன்படுத்துகின்றனர். அதனை சகித்துக் கொள்வது மிகவும் கடினமாகும். இதன் காரணமாக சிலருக்கு தனது பணியை விட வேண்டியது உள்ளது. பல அஹ்மதிகள் வியாபாரம் செய்யக்கூடியவர்களாக உள்ளனர். கடைகள் வைத்துள்ளனர். சுற்றுப்புறத்தில் அவர்களுக்கு எதிராக அவப்பெயர் உண்டாக்கப்படுகின்றது. இவர்கள் நவூதுபில்லாஹ் நபி (ஸல்) அவர்களுடைய கண்ணியத்தை சீர்குலைக்கக் கூடியவர்கள் ஆவார்கள். பெருமானார் (ஸல்) அவர்களை இவர்கள் காத்தமுன்னபிய்யீன் என ஏற்றுக் கொள்வதில்லை எனக் கூறுகின்றனர். ஆனால் அஹ்மதிகள் மட்டும் தான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய கத்மே நுபுவ்வத்தின் சரியான அறிவைப் பெற்றவர்கள் ஆவார்கள். மேலும் பெருமானார் (ஸல்) அவர்களை காத்தமுன்னபிய்யீன் ஆக ஏற்காத ஒவ்வொருவரையும் நாம் காஃபிர் எனவும் கருதுகின்றோம். அஹ்மதிய்யத்தின் அடிப்படை இதைத் தவிர வேறொன்றும் இல்லை.

பிறகு பள்ளிக்கூடங்களில் அஹ்மதி மாணவர்களுக்கு Torture கொடுக்கப்படுகின்றது. பல்வேறு கஷ்டங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. அவர்களுக்கு Mental Torture கொடுக்கப்படுகின்றது. எவ்வாறிருப்பினும் இந்த அனைத்து கஷ்டங்கள் இருந்தும் கூட ஒவ்வொரு அஹ்மதிக்கும் ஜமாஅத்தின் கண்ணியத்தைக் கவனத்தில் கொள்வது அவசியமாகும். சூழ்நிலையின் காரணமாக புகலிடம் வேண்டுமென்றால், அதற்கும் பல வழிகள் உள்ளன. நீங்கள் வாருங்கள். நான் இந்த விசயத்தை மீண்டும் கூறுகின்றேன். இதற்கு முன்பும் இதனை பலமுறை கூறியுள்ளேன். அதாவது புகலிடம் கோரும் நேரத்தில் தவறான, பெரிய பெரிய கருத்துக்களைக் கூறுவதற்குப் பதிலாக சுருக்கமான, உண்மையினை அடிப்படையாகக் கொண்ட விசயமாக இருந்தால் நல்லது. பிறகு இங்குள்ள பெரும்பாலான அதிகாரிகள் மற்றும் நீதிபதிகள் மனித இனத்தின் மீது அனுதாபம் காட்டுவதில் மென்மையாளர்களாகவே உள்ளனர். பெரும்பாலாரிடம் மனித அனுதாபம் இருக்கின்றது. புகலிடம் கோருவதை ஏற்றுக் கொள்கின்றனர். சில பிடிவாதக்காரர்களும் உள்ளனர். ஒருமுறை மறுத்து விட்டால் பிறகு அவர்களை சமாதானப்படுத்துவது மிகவும் கடினமாகும். பிறகு எந்த அளவு கதைகளைக் கூறினாலும் அவர்கள் எந்த தாக்கத்திறகும் ஆளாகமாட்டார்கள். பிறகு இந்த தவறான கூற்றுகளினால் ஓர் அஹ்மதி பாவம் செய்யக் கூடியவராகிறார். எனவே நாம் உண்மையான கூற்றைக் கூறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். சுருக்கமாகப் பேச வேண்டும். இந்த அனைத்து தொல்லைகளையும் எடுத்துக் கூறுங்கள். நேரடி அச்சுறுத்தல் இருந்தால் மட்டும்தான் வழக்கு பாஸ் ஆகும் என்பது கிடையாது. இதனை தவிரவும் வழக்கு பாஸ் ஆகத்தான் செய்யும். எனவே அடிப்படை உண்மையில் அமைந்திருந்தால் அனைத்து வழக்குகளும் வெற்றி பெற்று விடும்.

எவ்வாறிருப்பினும், இது நமது பொறுப்பாகும். ஒவ்வொரு அஹ்மதியின் பொறுப்பாகும். குறிப்பாக வெளிநாடுகளில் இருக்கக் கூடியவர்களது பொறுப்பாகும். அதாவது இந்த கஷ்டங்களில் பிணைக்கப்பட்டுள்ள இந்த மக்களுக்காக எல்லா வகையிலும் கஷ்டத்திலும் ஏழ்மையிலும் இருக்கக்கூடிய இந்த அஹ்மதிகளுக்காக துஆ செய்ய வேண்டும். அல்லாஹ் அவர்களது கஷ்டங்களை அகற்றுவானாக! அவர்களுக்கு எளிமையை ஏற்படுத்துவானாக!

அல்லாஹ் மாநாட்டிற்கு வந்திருக்கக் கூடியவர்களுக்கும் மாநாட்டு சூழலின் அருளிலிருந்தும் பலன்பெறச் செய்வானாக! வெகு தூரத்திலிருந்து மாநாட்டில் கலந்து கொள்வதற்காக வந்தவர்களுடைய துஆக்களையும் ஏற்றுக் கொள்வானாக! மேலும் சிலர் வருவதற்காக காத்திருந்தனர். ஆனால் விசாக்கள் கிடைக்கவில்லை. அல்லாஹ் அவர்களது நல்லெண்ணங்களை நிறைவேற்றுவானாக! அவர்களது துஆக்களையும் ஏற்றுக் கொள்வானாக! ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் செய்த துஆக்களுக்கு அவர்களும் வாரிசாகட்டுமாக!

இறுதியில் நான், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய ஒரு கூற்றை எடுத்துரைக்கின்றேன். அவர்கள் கூறுகின்றார்கள்:

இறைவன் மகிழ்ச்சி அடைய வேண்டும் என்பதற்காக நன்மைகளைச் செய்ய வேண்டும். அதன் மூலம் அவனது திருப்தி கிடைக்க வேண்டும். மேலும் அவனது கட்டளைகளுக்குக் கட்டுப்பட வேண்டும். அதில் நன்மை இருக்கிறதா? இல்லையா? எனப் பார்க்காத சமயத்தில் தான் ஈமான் முழுமை அடைகின்றது. மேலும் இதற்கு இடையிலுள்ள யூகமும் சந்தேகமும் ஒழிந்து விட வேண்டும். முழுமையான ஈமான் கலப்பற்ற முறையில் அல்லாஹ்வின் திருப்தியைக் கண்முன் வைத்திருக்கும் போது தான் கிடைக்கும். இதன் மூலம் நற்கூலி கிடைக்குமா? கிடைக்காதா? என எண்ணக் கூடாது. இறைவன் யாருடைய நன்மையையும் வீணாக்குவதில்லை என்பது உண்மை தான்.

إِنَّ اللهَ لَا يُضِيعُ أَجْرَ الْمُحْسِنِينَ

*நன்மை செய்யக் கூடியவர்கள் கூலியைப் பெறுவதைக் கண்முன் நிறுத்தக் கூடாது. (9:120)*

ஒரு விருந்தினர் இங்கு நிம்மதி கிடைக்கும். குளிர்ந்த பானங்கள் கிடைக்கும் என்பதற்காக வந்தால், அவர் இந்த பொருட்களுக்காகத்தான் வருகின்றார். ஆனால் விருந்தோம்பல் செய்யக் கூடியவர் முடிந்த அளவு விருந்தோம்பலில் எவ்வித குறையும் வைக்கக் கூடாது. அவருக்கு நிம்மதியினை வழங்க வேண்டும். அவர் அவ்வாறு வழங்கவும் செய்கின்றனர். ஆனால் விருந்தினர் இவ்வாறு எதிர்பார்ப்பது இழப்பிற்குக் காரணமாக அமைந்து விடும்.

எனவே விருந்தினரும், விருந்தோம்பல் செய்பவரும் அவர்களது நோக்கம் என்னவென்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். அல்லாஹ் விருந்தோம்பல் செய்பவர்களை தனது கடமையை செய்பவர்களாக ஆக்குவானாக! மேலும் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக இந்தக் கடமைகளைச் செய்பவர்களாக ஆகட்டுமாக! விருந்தினர்களும் அல்லாஹ்விற்காக இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக வந்தவர்களாக இருக்கட்டுமாக! எவ்வித சுய நோக்கமும் அவர்களிடம் இல்லாமல் இருக்கட்டுமாக!

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**
**HAZRATH KHALIFATUL MASIH V**
at **HADEEQATUL MAHDI JALSA GROUND,** England
on **30.08.2013**

Translated by : Maulavi N. ZIAUL HAQ Sb.
Typeset by : A. MUHAMMAD NISAR
Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005. TELEFAX : 0462 - 2352456